# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(1993, பெப்ருவரி மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, பெப்ருவரி மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை : சதம் 30* *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1993, பெப்ருவரி மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 64/91
4015

1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 403ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 403ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம்:—

"(1) நீதிவான் ஒருவர் அல்லது மேல்நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், விடயத்திற்கேற்ப் ஏதேனும் விசாரணையின் அல்லது விளக்கத்தின் ஏதேனும் கட்டத்திலேனும், பிணையில் விடப்படமுடியாத தவறெதற்குமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளை அவரது தற்றுணிபின்பேரில் பிணையில் விட்டுவிடலாம்:

ஆயின், தண்டனைச் சட்டக்கோவையின் 114, 191, 296ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றை அவர் புரிந்துள்ளாரென அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரெனச் சந்தேகிக்கப்பட்டால் அல்லது புரிந்துள்ளாரென சந்தேகிக்கப்பட்டால் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருந்தாரென சார்த்தப்பட்டால், மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவரினாலல்லாது ஏதேனும் விசாரணை அல்லது விளக்கத்தின் எந்தக் கட்டத்திலேனும், விட்டுவிடுதலாகாது;".

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "நீதிவான் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியில்லாமல் அத்தகைய ஆளைப் பிணையில் விடுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஆள் மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரினாலல்லாது பிணையில் விடப்படுதலாகாது" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

3. இச்சட்டத்தில், சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.